# வலயக்கல்வி அலுவலகம்
# மன்னார்

## தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை – 05
## வினாப்பத்திரம் - 02
## 2023

சுட்டெண் - ........................ நேரம்:- 1.15மணித்தியாலம்

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்

- உங்கள் சுட்டெண்ணை அடைப்புக்குள் உள்ள புள்ளிக் கோட்டிலும் 3வது பக்கத்திலுள்ள புள்ளிக்கோட்டிலும் எழுதுக.
- இவ்வினாத்தாளில் 62 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ......................<br>பெயர்<br>......................<br>ஒப்பம் |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன் | ......................<br>பெயர்<br>...................<br>ஒப்பம் |
| **மதிபீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீடசகர்**<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப்புள்ளியும் சரியென உறுதிப்படுத்துகின்றேன் | ......................<br>பெயர்<br>......................<br>ஒப்பம் |

| | |
|---|---|
| இலக்கத்தில | |
| எழுத்தில | |

01) **பந்தியை மட்டும் துணையாகக் கொண்டு விடையளிக்குக.**

நாம் நம் பண்டைய விளையாட்டுக்களை முற்றிலும் மறந்து விட்டோம்.அவற்றில் ஒன்று தான் கெந்தி விளையாட்டு. ஓடுபவர்களை ஒற்றைக் காலால்கெந்தி அடித்துத் தொடுவது கெந்தி விளையாட்டாகும். இது சிறுவர்களுக்கு சிறந்த உடற்பயிற்சி ஆகும். கெந்தி விளையாட்டு பிள்ளைகளின் உடலுக்குப் புத்துணர்ச்சியை அளித்து, அவர்களின் சோம்பேறித்தனத்தைக் குறைக்கிறது. இது கால்களுக்கு இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துகிறது. இழப்பில் ஈடுகட்டும் ஆற்றலைத் தருவதோடு, தன்னம்பிக்கையையும் அதிகரிக்கிறது. கெந்தி விளையாட்டிற்கு இத்தனை பேர் விளையாட வேண்டும் என வரைமுறை எதுவும் இல்லை. இதில் எத்தனை பேர் வேண்டுமானாலும் பங்குபற்றலாம்.

1) பந்தியில் கூறப்படும் விளையாட்டு எது? ____________________

2) இவ்விளையாட்டின் நன்மை ஒன்று தருக? ____________________

3) ‘‘விளையாட்டு’’ என்ற சொல்லில் உள்ள உயிர்க்குறி ஒன்று தருக? ____________________

4) ‘‘நவீன’’ என்பதன் எதிர்ப் பதத்தை பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக? ____________________

5) இவ் விளையாட்டில் எத்தனை பேர் விளையாட முடியும் ____________________

6) சக்தி என்பதன் ஒத்த சொல் யாது? ____________________

(6புள்ளிகள்)

02) பின்வரும் ஒவ்வொரு சொற் கூட்டங்களுள் எந்தச் சொல் வேறுபட்டது எனக் கண்டு பிடித்து அச் சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1. மை, பேனா, மலர், புத்தகம், பென்சில் (...............................)
2. பாடகன், அம்மா, அப்பா, அக்கா, அண்ணன் (...............................)
3. மயில், குருவி, மரை, குயில், காகம் (...............................)
4. மரம், மான், வேர், கிளை, தண்டு (...............................)
5. ஆசிரியர், அதிபர், மாணவர், பெற்றோர், நடிகன் (...............................)

(5புள்ளிகள்)

03) தடித்த எழுத்தில் உள்ள சொற்றொடர்களின் கருத்தினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. மகனின் சாதனையைக் கேள்வியுற்ற தாய் **உச்சிகுளிர்ந்தாள்**
   (பாராட்டினாள் / மிக மகிழ்ந்தாள்)

2. பிறரது **சுகதுக்கங்களில்** நாம் பங்கு கொள்வது மனிதத்தன்மையாகும்.
   (துன்ப துயரம் / இன்ப துன்பம்)

(2புள்ளிகள்)

04. தொடக்கத்தில் தரப்பட்ட சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லைத் தெரிவு செய்க. அதன்கீழ்க் கோடிடுக.

தானம் - (பனுவல், ஈகை, மகவு)

கண் - (நயனம், மல்லிகை, அம்புலி)

(2புள்ளிகள்)

05. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

1. சந்துரு கடையில் தலாணி வேண்டினான்.

____________________

2. நான் கையை சவுக்காரம் போட்டு கழுவினேன்.

____________________

(2புள்ளிகள்)

06. தமிழ் நெடுங்கணக்கு ஒழுங்குமுறையில் எழுதப்பட்டுள்ள மெய் எழுத்துக்களின் வரிசையில் விடுபட்ட எழுத்துக்களை எழுதுக.

க், ங், ச், ஞ், .................., ண், த், ந், .................., ............ (3புள்ளிகள்)

07. கீழே தரப்பட்ட சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

1. மற்றவர்களைப் பற்றி அக்கறையில்லாதவன் ..........................................................
2. முனிவர்கள் வாழுமிடம் ........................................................................................ (2புள்ளிகள்)

08. சரியான விடையை எழுதுக.
1. இருளை ஒளியால் நிரப்பிய அற்புத மனிதர் யார்? ............................................................

2. வெருளியின் விரல் போன்று இருப்பவை எவை?.....................................................................

(2புள்ளிகள்)

09. பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

 ................................  .......................................

(2புள்ளிகள்)

10. 1. பின்வரும் ஆங்கில வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.
I am Sahan ..........................................................................................

2. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கில எழுத்தில் எழுதுக.
நான் மன்னாரில் வசிக்கிறேன்.
............................................................................................................................

(2புள்ளிகள்)

11. பொருத்தமான ஆங்கிலச் சொல்லைத் தெரிவு செய்க.
1. ..................................... (I/ We) are Sri lankan

2) This is ....... ( an /a ) apple (2புள்ளிகள்)

12. தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.
1. வேலாவ தொளஹுய் ..................................................................................
2. எத்தனட்ட துவன்ன ..................................................................................

(2புள்ளிகள்)


13. பின்வருவனவற்றின் சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.
1. சாப்பிடுங்கள் ..................................................................
2. நண்பி .................................................................... (2புள்ளிகள்)

**தரப்பட்டுள்ள வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

14. இலக்கங்களில் எழுதுக.
பத்தொன்பதாயிரத்து எண்பத்தொன்பது.........................................................

15. தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்குரிய முந்திய, பிந்திய உரோமன் எண்களை எழுதுக.
............................................., xviii ........................................


16. தரப்பட்டுள்ள எண் கோலத்தில் அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.
1. 4, 8, 16, .........................., ............................
2. 63, 56, 49, .........................., .........................

17. இவ்வுருவில் 

1. நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக. .................................
2. நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக. ..............................

18. பி.ப 2.45 மணியினை நியம முறையில் காட்டும் விதத்தினை எழுதுக?
.......................................................................


19. A, B ஆகிய இரு பென்சில்களுக்கு இடையிலான நீள அளவுகளின் வித்தியாசத்தை மில்லி மீற்றரில் எழுதுக.




.........................................................................

20. 6kg 500g நிறையுள்ள தேயிலையை 500g நிறை கொண்ட எத்தனை பொதிகள் ஆக்கலாம்?

..........................................................................................

21. 


B பாத்திரத்தை முழுமையாக நிரப்புவதற்கு A பாத்திரத்தால் இன்னும் எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும். ..............................................................................

22. 718 பென்சில்களை ஒரு பிள்ளைக்கு 6 வீதம் பெட்டிகளில் பொதிசெய்ய வேண்டியுள்ளது.

i. பொதிசெய்யத் தேவையான பெட்டிகள் எத்தனை?. …………………...................................

ii. பொதிசெய்த பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்கள் எத்தனை? ..............................................

23. பி.ப. 1.45 மணிக்கு கோயிலுக்குப் புறப்பட்ட கமலா ஒரு மணித்தியாலம் 30 நிமிடங்களின் பின்னர் கோயிலைச் சென்றடைந்தாள். அவள் கோயிலை அடைந்த நேரம் யாது? .................................................


24. அருகில் உள்ள உருவின் 



1. உச்சிகளின் எண்ணிக்கை யாது? ...................................
2. A முகத்தின் வடிவம் யாது? ............................................

25. தை மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை எனின் அம்மாதத்தில் வரும் புதன்கிழமைகளின் எண்ணிக்கை யாது? ………………………………………………………….................................................................

26. ரவி குமார் ஆகியோரின் நிறை 70kg ஆகும். ரவியை விட குமார் 8kg நிறை கூடியவர் எனின் ரவியின் நிறை யாது?
……...........................................................

27. அருகே உள்ள உருவின் சமச்சீர் கோடுகளை வரைக.






28. அம்பாந்தோட்டையிலிருந்து கொழும்பு வரையான தூரம் யாது?

.........................................................................................

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

30) உலர்த்திய பூக்களை அவிப்பதால் ஓர் ஔடத பானம் தயாரிக்கத்தக்க தாவரம்,

1.ஆவரசு 2. கோப்பி 3. கொத்தமல்லி

31) வயல் வேலைகளின் போது பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் விடைத் தொகுதி,
1.மண்வெட்டி, வனைசில்லு, 2. நுகத்தடி, அரிவாள், 3.கலப்பை, செக்கு,

32) இலங்கையின் கடற்கரை இருக்கும் ஒரு மாகாணம்,
1. சப்பிரகமுவா மாகாணம் 2. மத்திய மாகாணம் 3 வட மாகாணம்

33) பச்சையாக வெட்டிய எம்மரக்கறித் துண்டு பாத்திரத்தில் உள்ள நீரில் இடும்போது அந்நீர் நிறம் பெறும்,
1. கத்தரிக்காய் 2. பூசணிக்காய் 3.பீற்றூட்

34) காற்றின் மூலம் மண்ணரிப்பு அதிக அளவில் நடைபெறும் பிரதேசம்,
1. உயர்ந்த மரங்களைக் கொண்ட வனப்பிரதேசம்
2. அதிக அளவு கட்டடங்களைக் கொண்ட நகர்ப் பிரதேசம்
3. புற்களற்ற மணற்பாங்கான பிரதேசம்

35) பின்வரும் உடுக்கோலங்களில் மிகவும் கூடிய எண்ணிக்கையான உடுக்கள் அடங்கும் உடுக்கோலம் யாது?
1.வேட்டைக்காரன் 2. பெருங்கரடி 3.விருச்சிகம்

36) “புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே” எனும் பாடல்
1. அரிவி வெட்டுப்பாடல் 2.வண்டிப்பாடல் 3. மீனவர் பாடல்

37) நுரைச்சோலை மின்வலு நிலையத்தின் படம் அச்சிடப்பட்டுள்ள இலங்கைக் காசுத்தாள்
1. ரூபாய் 50 2. ரூபாய் 100 3. ரூபாய் 500

38) உடலை நோயிலிருந்து பாதுகாக்க உதவும் போசணைக் கூறு எது?
1. மாப்பொருள் 2. கொழும்பு 3. விற்றமின்கள்

39) இலங்கைக்கு மிக அண்மை அமைந்துள்ள நாடுகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க
1. மாலைதீவுகள், நேபாளம், பூட்டான்
2. பாகிஸ்தான், ஜப்பான், பங்களாதேஷ்
3. பங்களாதேஷ், சீனா, மாலைதீவுகள்

40) அருகிலுள்ள குறியீட்டின் மூலம் நாம் பெறும் சேவை
1. போக்குவரத்து 2. மின்சாரம் 3. தபாற்சேவை

41) பின்வருவனவற்றில் எது தொலைக்காட்சிப் பார்ப்பதால் ஏறப்படக்கூடிய பாதகமாகும்?
1. நேரடி ஒளிபரப்புக்களை பார்க்கக் கிடைத்தல்
2. கல்வி நிகழ்ச்சிகளைப் பார்க்கவும் கேட்கவும் சந்தர்ப்பம் கிடைத்தல்
3. வாசிப்பதற்கான ஆர்வம் குன்றிப் போதல்.

42) எட்டுக்கால்களையுடைய பிராணி
1. இறால் 2. தேனீ 3. சிலந்தி

43) எழுத்துக்களை உருப்பெருத்துப் பார்ப்பதற்குப் பயன்படும் கருவி எது?
1. ரெலஸ்கோப் 2. நுணுக்குக்காட்டி 3. கைவில்லை

44) பின்வருவனவற்றுள் முதலுதவிப் பெட்டியில் இருக்க முடியாதது எது?
1. பிளாஸ்டர் 2. அளவுநாடா 3. பனடோல்

45) வதிவிட, குணநலச்சான்றிதழைப் பெற்றுக்கொள்வது?
1. சமாதானநீதவான் 2. மாவட்ட அரசாங்க அதிபர் 3. கிராம உத்தியோகத்தர்

46) அண்மையில் வெளியிட்ட குற்றி நாணயங்களில் ஐம்பொன் நிறத்திலிருந்து மாற்றப்பட்ட நாணய வகை ?
1. ரூபாய் 10.00, ரூபாய் 5.00
2. ரூபாய் 100.00 ரூபாய் 50.00
3. ரூபாய் 500.00 ரூபாய் 1000.00

47) இலங்கையில் பாதசாரிகள் கடக்கும் மஞ்சள் கோட்டிற்குப் பதிலாக மாற்றப்பட்ட நிறம் எது?
1. கபிலம் 2. இளமஞ்சள் 3. வெள்ளை

48) தாவர இலைகளை பயன்படுத்தி கூடமைக்கும் பிராணி
1. செவ்வெறும்பு 2. அணில் 3. ஆட்காட்டிகுருவி

49) உலைத்துருத்தியை பயன்படுத்துபவர்,
1.தச்சர் 2.மீனவர் 3.கொல்லர்

50) காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணம்
1.கடம் 2.கொம்பு 3.தவில்

51) வெடித்தல் மூலம் பரம்பலடையும் வித்துக்களை கொண்ட தாவரம்,
1.சோளம் 2. எண்ணெய் 3.குன்றிமணி

52) சிறுவர் பாதுகாப்பு தொடர்பான முறையீடுகளுக்கு அழைக்க வேண்டிய தொலைபேசி எண்,
1.119 2.1919 3.1929

53) அணிந்திருக்கும் ஆடையில் தீப்பற்றிய ஒருவருக்கு மிகவிரைவில் செய்ய வேண்டிய முதலுதவி,
1. தீப்பற்றியவரை வெளியில் ஓடவிடல்
2. ஆடையில் தீப்பற்றிய பகுதியை கிழித்தல்
3. தீப்பற்றியவரை நிலத்தில் உருண்டு புரளச் செய்தல்

54) பலகையில்குழி குடையவும், உருவங்களைச் செதுக்கவும் பயன்படுவது,

1. துறப்பணம் 2.வாள் 3.உளி

55) தொல்பொருள் பெறுமதி மிக்கதாகவும் கலைத்துவப் பெறுமதி மிக்கதாகவும் உள்ள இடம்

1. புத்தளம் 2. எம்பிலிப்பிட்டிய 3.சீகிரியா

56) காந்தக்கோல் ஒன்றில் கவரும் தன்மை கூடுதலாக உள்ள பகுதி

1. வடமுனை 2. தென்முனை 3.வட,தென்முனை

57) மக்கள் மாட்டிறைச்சியை உண்பதைத் தவிர்க்க வேண்டும் என அரும்பாடு பட்டவர்,

1. 

2. 

3. 

58) பூச்சிகளுக்குரிய பொதுவான இயல்பாக அமைவது,

1. எல்லா பூச்சிகளும் பறப்பன.
2. எல்லா பூச்சிகளும் மனிதர்க்கு தீமை செய்வன.
3. பூச்சிகளின் உடலமைப்பு மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

59) மூலவர்ணங்களை ஒன்றோடு ஒன்று கலப்பதனால் தோன்றும் நிறம் எது?

1. சிவப்பு 2. கபிலம் 3. வெள்ளை

நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக மூன்று வாக்கியம் எழுதுக? குறைந்தது ஐந்து சொற்களாவது ஒவ்வொரு வாக்கியத்திலும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இடம் பெறுதல் வேண்டும்.

1. ..................................................................................................................

..................................................................................................................

2. ..................................................................................................................

..................................................................................................................

3. ..................................................................................................................

..................................................................................................................

(6புள்ளிகள்)